Hr. Koolismoron


Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 16 | ( 29 - 03 - 1992 ) | ஞாயிற்றுக்கிழமை | ஒலை 40


## அபாயக் கொடுப்பனவிற்கு திறைசேரியில் பணமில்லை

அபாய சூழலில் கடமையாற்றிய அரச ஊழியர்களுக்கு அபாய காலக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரச திறைசேரியில் நிதி இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல அரச திணைக்களங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அரச தொழிலாளர்களுக்கு மேற்படி அபாயகாலக் கொடுப்பனவுகள் நீண்டகாலமாக வழங்கப்படவில்லை. இதுவரை மேற்படி கொடுப்பனவு வழங்கப்படாத சகல அரசதிணைக்களங்களையும் சார்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்குச் சுமார் 500 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளர் திரு: பாஸ்கரலிங்கம் அறிவித்துள்ளார். ஆனால் மேற்படி தொகைப் பணத்தை இக்கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடுசெய்வதற்கு திறைசேரி (4 ஆம் பக்கம் பார்க்க)

# 9 காவலரண்கள் புலிகளால் அழிப்பு

## 7 ஆயுதப்படையினர் பலி
## பூநகரியில் துணிகர தாக்குதல்

(பூநகரி - கொழும்பு)

பூநகரி - கறுக்காய்த் தீவிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நேற்று அதிகாலை நடத்தினர். இத்தாக்குதலின் போது ஒன்பது காவலரண்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டன. ஓர் உயர் அதிகாரி உட்பட ஏழு சிறிலங்கா ஆயுதப்படையினர் கொல்லப் பட்டனர். பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதல் நடவடிக்கையின் போது இரு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் ஆரம்பித்த இம் மோதல் சுமார் முப்பது நிமிட நேரம்வரை நீடித்தது. இருப்பினும் புலிகளின் பலமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா ஆயுதப் படையினர் இறந்த தமது சகாக்களையும் விட்டுவிட்டு ஓட்டம் எடுத்தனர்.

விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட இம் மோதலில் ஓர் இராணுவ உயர் அதிகாரி உட்பட ஐந்து இராணுவத்தினரும் இரண்டு கடற்படையினரும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன

## இரு போராளிகள் வீரச்சாவு

## மகாபொல 950ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொலபுலமைப்பரிசில் கொடுப்பனவுகள் மாதமொன்றுக்கு 650 ரூபாவிலிருந்து 950 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு ஏப்ரல்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குவரும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## ஜூனில் தோட்ட நிர்வாகம் தனியாரிடம்

தோட்டங்களின் நிர்வாகங்களை எதிர்வரும் ஜூன்மாதம் தொடக்கம் தனியார்துறை பொறுப்பேற்கும் என தோட்ட சேவைகள் அமைச்சர் ஜனாப் எம்.எல்.எம் அபுசாலி தெரிவித்துள்ளார்.

இந்த பொறுப்புகளை 46 சிறிலங்கா தனியார்துறை நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. இவை இப்பொழுது அரச கூட்டுத்தாபனங்களால் நிர்வகிக்கப்படும் 28 தோட்டங்களின் நிர்வாகத்தினை ஏற்றுக் கொள்ளும்.

ஒவ்வொரு நிறுவனமும் 15 ஆயிரம் முதல் 17 ஆயிரம் ஹெக்டயர் பரப்பளவுள்ள தோட்டங்களை நிர்வகிக்கும் என அவர் தெரிவித்தார்.

## தன்னைக் காயப்படுத்திய இளைஞன்

# இந்திய அரசு புலிகளுக்கு தடை?

## அடுத்த வாரம் முடிவு எடுக்கப்படும் என்கிறார் உள்துறை அமைச்சர்

(டில்லி)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிப்பது பற்றி இன்னும் ஒரு வாரகாலத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்படுமென்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் தெரிவித்தார்

நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகளை தடை செய்யும் விடயம் குறித்து மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக்கமிட்டி ஆராய்ந்து வருவதாகவும். தமிழக முதல்வரின் உயிருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அதனை மத்திய அரசு கவனத்தில் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கென தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்த மத்திய அரசு 10 கோடி ரூபா அனுமதித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதாவைக் கொலை செய்வதற்குக் கொலைப்படை திட்டமிட்டிருப்பதால், அவருக்கு மேலதிக பாதுகாப்புத் தேவைப்படுகிறது. எனவே அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த மத்திய அரசு விரும்புகிறது என்றும் சவான் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது புதுடில்லிக்கு சென்ற சிறிலங்கா கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா விடம் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரை விரைவில் ஒப்படைக்க ஆவன செய்யும்படி சிறிலங்கா ஜனாதிபதிக்கு செய்தி அனுப்பப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.



மேஜர் விவேகன்
(அர்ஜுன்)

பூநகரி கறுக்காய் தீவில் நேற்று இடம் பெற்ற காவலரண் தகர்ப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

★ மேஜர் விவேகன் (அர்ஜுன்) சூசையப்பு இன்பக்குமார் 5 ஆம் வட்டாரம், வல்லிபுனம்.

★ கப்டன் நிதிதரன் (அல்பேட்) சின்னராசா ஜீவரன் தலாவாய் பன்குடவெளி மட்டக்களப்பு ஆகிய வேங்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் நிதிதரன்
(அல்பேட்)

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(பூநகரி)

பூநகரி கறுக்காய் தீவில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் :

★ ரி-56-02 ரக துப்பாக்கி 03
★ ரி-81-01 ரக துப்பாக்கி 01
★ ரி-56 ரக துப்பாக்கி 02
★ 203 பிஸ்டல் 01
★ 203 பிஸ்ரல் எறிகணை 22
★ தொலைத் தொடர்பு சாதனம் 01
★ ரி-56 மகசீன் 10
★ ரி-81 மகசீன் 06
★ நடுத்தர ரவைகள் 1726
★ ஜே. ஆர். கைக்குண்டு 04
★ இரு விழி தொலைகாட்டி (பைனாகுலர்) 02
★ ரம் மகசீன் 01
★ ஏ.கே.எல்.எம்.ஜி லிங் 175

# யாழ் நிலப் பயன்பாடு; திட்டமிட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலப்பயன்பாட்டை திட்டமிடுவதற்காக ஒரு குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக் குழுவினர் யாழ். மாவட்டத்தின் நிலப்பயன்பாடு தொடர்பான வரைபடங்களைத் தயாரிப்பது, தரவுகளைப் பெறுவது என்பவற்றின் ஊடாக நிலப்பயன்பாட்டிற்கான திட்டத்தை வகுக்கவுள்ளனர்.

அத்துடன் திட்டமிட்ட அடிப்படையில் பயிரிடுவதற்கு பொருத்தமான எண்ணெய் வித்துக்களை தெரிவு செய்யவும், தெரிவு செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்களை பயிரிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்களை தேர்வு செய்யவும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விவசாய விரிவாக்கப் பகுதி மற்றும் விவசாய ஆராய்ச்சிப்பகுதி ஆகியவற்றுடன் இணைந்து தமிழீழ ஆய்வு நிறுவனம் உதவிகளை மேற்கொள்ளவுள்ளது.

## யாழ் செஞ்சிலுவைச் சங்கம்

# தேர்தலில் இருந்து வேட்பாளர் பலர் விலகினர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் இன்று நடைபெறவிருக்கும் தேர்தலில் முக்கிய பதவிகளின் வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது தலைவர் பதவிக்கு டாக்டர் ஜேசுதாஸ் செயலாளர் பதவிக்கு ந. ஆனந்தசபேசன் த. கோகுலன் ஆகியோரும் செயற்குழுவில் சிலரும் போட்டியிலிருந்து விலகிவிட்டனர்.

மேலும் இன்று நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் குழப்பங்கள் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தமிழீழ காவல்துறையின் உதவியைநாடியிருப்பதாகவும் சில அங்கத்தவர்கள் தற்பொழுது நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கும் இடையில் பெரும் காரசாரமான வாக்குவாதத்திற்கு இடமளிக்கும் வகையில் பல பிரேரணைகளை கொண்டுவந்துள்ளனர் என்றும், சில அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்ய இருப்பதாகவும் தெரியவருகிறது. (75)

மது போதையில் தன்னைத் தானே கத்தியால் வெட்டி காயப்படுத்திய இளைஞர் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

டச்வீதி உடுவிலைச் சேர்ந்த என். இந்திரன் (வயது 32) என்ற இளைஞரே இவ்வாறு தன்னைத்தானே வெட்டிக் காயப்படுத்தியிருக்கிறார்.

## கணக்காளர் சச்சிதானந்தா காலமானார்

பட்டயக்கணக்காளர் சச்சிதானந்தா சிட்னியில் காலமானார். இலங்கை கணக்கியல் துறையின் சிரேஷ்ட உறுப்பினரான இவர் விடுமுறையில் அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகருக்கு சென்றபோது கடந்த திங்களன்று காலமானார்.

# அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியா தீவிர முயற்சி

## விமானம் மூலம் அனுப்பும் யோசனை

(சென்னை)

தமிழ்நாட்டிலிருந்து சுமார் ஐந்தாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை விமானமூலம் இலங்கைக்கு அனுப்பி வைப்பதுபற்றி ஆலோசிக்கப்படுகிறது.

இதுபற்றி மத்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இருப்பதாக தமிழ்நாடு வருவாய் நிர்வாக அகதிகள் மறுவாழ்வுத் துறை சிறப்பாணையர் கி எம். ராமதாஸ் கோவிற்பட்டியில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தற்போது இவர்களைக் கப்பல்மூலம் அனுப்புவதற்கும் போதிய வசதியில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களை பராமரிப்பதற்கென மாநில அரசு மாதந்தோறும் சுமார் 2 கோடி ரூபா செலவிட்டு வருகிறது என்று அவர் கூறினார்.

இதேவேளை இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் அவர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## "புலிகளின்" கப்பல் டொங்குநோவா

# ஊழியர்களின் மனுவை நீதிமன்றம் நிராகரிப்பு

(சென்னை)

தமிழகத்தின் காரைக்கால் கரைக்கு அப்பால் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட டொங்குநோவா என்ற கப்பலின் ஊழியர்களை விசாரிக்க சென்னையிலுள்ள நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று அவ் ஊழியர்கள் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. மனுவை தள்ளுபடி செய்த சிறப்பு நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதி எம. சௌந்தர பாண்டியன் தீர்ப்பு வழங்கும் போது தமிழகக் கரையோரப் பகுதியில் தடா சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்களை விசாரிக்க இந் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று குறிப்பிட்டார்.

மேலும் இக்கப்பல் சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு யுத்த தளபாடங்களை ஏற்றிச் சென்றதாக கூறப்படுகின்றது. இக்கப்பலில் இருந்த பத்துப் பேரும் தமிழ் நாட்டினுள் ஆயுதங்களைக் கடத்தி வர முனைந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# எதிரியின் ஆக்கிரமிப்புத் திட்டத்தை தாக்குதல்களால் முறியடித்தோம்

--- பரா

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு வெளிநாடுகளின் உதவியுடன் எம்மை அழித்து எமது மண்ணைக் கைப்பற்றி அதனைச் சிங்களப் பிரதேசமாக மாற்ற திட்டமிட்டது.

ஆனால் நாம் எமது மண்ணில் இருந்த பல இராணுவ முகாம்களை நிர்மூலமாக்கியதன் மூலம் அவர்களது திட்டத்தை முறியடித்தோம்.

இவ்வாறு நாவாந்துறை சென்நீக்கலஸ் தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவு தின கலந்துரையாடலில் கலந்துரையாற்றுகையில் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா கூறினார்.

கடற்புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் பெருந்தொகையான ஆண்களும், பெண்களும், வயோதிபர்களும், சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

காலை 8 00 மணி முதல் மாலை 4 00 மணி வரையும் அடையாள உண்ணா நோன்பும் மாலை 7 00 மணிக்கு கலந்துரையாடலும் அதனைத் தொடர்ந்து பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அந்தபரா தொடர்ந்து உரையாற்றுகையில் 1987 இல் சிறிலங்கா இந்திய அரசுகள் ஒன்றிணைந்து எமது போராட்டத்தை நசுக்கி எமது மண்ணை அபகரிக்க வழிகண்டு கட்டின. இதற்கென ஒப்பந்தத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் அமைதிப் படை என்ற பெயரில் எமது மண்ணில் குவிக்கப்பட்டனர்.

உலகை ஏமாற்றும் நோக்குடன் இந்தியப் படையினர் கைப்பொம்மைகளைக் கொண்டு இடைக்கால அரசை அமைக்க முற்பட்டபோது தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே. அவர்களுடன் அரசு நிபந்தனையற்ற பேச்சு வார்த்தையை நடாத்த வேண்டும் இதற்கு சாதகமாக போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் தியாகி அன்னை பூபதி சாகும்வரை உண்ணா நோன்பிருந்து தனது கோரிக்கைகள் நிறைவேறா நிலையில் தியாக மரணமடைந்தார் இந்த அன்னையின் தியாகங்கள் தமிழீழ வரலாற்றில் மறக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாதவை.

தற்போது நாம் எமது எதிரியை ஆகாயம், கடல், தரை மார்க்கமாக நேருக்கு நேர் நின்று தாக்கி அழித்து வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி

# நினைவஞ்சலிக் கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று கொடிகாமம் வட்டவைப்பிரிவில் கச்சாய் அம்மன் கோயிலில் நடைபெறவுள்ளது.

உண்ணாவிரதம் காலை 8 00 மணி தொடக்கம் பிற்பகல் 4. 00 மணி வரை இடம்பெறும். மாலை 7. 00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும். இந்த நிகழ்ச்சியில் கலையரசன் தமிழன்பன், இ. நிலா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# வங்கிகள் நிதி நிலைமை உறுதியாகவேயுள்ளது

## - பிரேமதாசா

[கொழும்பு]

மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் நிதிநிலைமையைப் பொறுத்தவரை உறுதியான வையாகவே உள்ளன. அத்துடன் இன்னமும் அவை நாட்டின் மிகப்பெரும் சொத்துக்களாகவே இருக்கின்றன என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார். சீ பாங் நிதிநிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வங்கிகள் தொடர்ந்து அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகவே இருக்கும் இதன் நிர்வாகம் மட்டுமே வர்த்தகமயமாக்கப்படவுள்ளது, சிலர் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டைத் திரித்து பிழையான தோற்றமொன்றை உருவாக்க முயல்கின்றார்கள் என தெரிவித்தார்.

இதேவேளை இவ் வங்கிகளின் நிர்வாகத்தை தனியார்மயமாக்குவதற்கு காரணம் அவற்றின் நிதிநிலைமை மோசமடைந்தமையே என பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது,

# தேர்தல் அறிக்கை தாமதமானது ஏன்?

## - தேர்தல் ஆணையாளர் விளக்கம்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் தொடர்பான அறிக்கையை வெளியிட தாமதித்தற்கான காரணங்களை தெரிவித்து தேர்தல் ஆணையாளர் ஆர். கே. சந்திரானந்தடிசில்வா கடந்த செவ்வாயன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

1989 பெப்ரவரி 16 இல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து முடிவுகளின் செல்லுபடி தன்மைக்கு எதிராக பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன

மனுக்கள் மீதான விசாரணை முடியும் வரை தேர்தல் அறிக்கையை தயாரிக்கும் பணியை ஆரம்பிக்க முடியாதிருந்தது ஏனெனில் மனுக்கள் நீதிமன்ற விசாரணையில் இருந்தால் தேர்தல் பற்றி பரிசீலனை செய்யக்கூடாது என்பது கொள்கை சம்பந்தப்பட்டவிடயமாகும்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த ஆயத்தங்களை செய்ய வேண்டி இருந்ததாலும் அறிக்கையை தயாரிக்கும் வேலை தொடங்க முடியாதிருந்தது.

எனவேதான் தேர்தல் அறிக்கையை தயாரிக்கும் பணி 1991 ஜூன் மாத நடுப்பகுதியில் தொடங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க

# யாழ்.கிளைதேர்தல் குறித்து துண்டுப் பிரசுரம் வெளியீடு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக தமக்கு வாக்களிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரங்களை வேட்பாளர்கள் வெளியிட்டுள்ளனர் இவற்றில் தமது சேவைகள், சாதனைகள் என்பனவற்றை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் அத்துடன் சங்க அங்கத்தவர்களை நேரடியாக சந்தித்து ஆதரவு தேடிவருகின்றனர் என தெரியவருகிறது.

இதேவேளை யாழ் கிளையின் அதிகாரிகளான தலைவர் செயலாளர், பொருளாளர், உபதலைவர் ஆகியோர் மீது ஊழல் குற்றச் சாட்டுக்கள் மற்றும் தனிப்பட்ட நடத்தைகள் குறித்த குற்றச் சாட்டுகள் என்பனவற்றைக்கொண்ட துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது 7 5)

## சமய அறிவுப் போட்டி

வண்ணைஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சன சமூகநிலையத்தினரின் வருடாந்த சமயஅறிவுப்போட்டி எதிர்வரும்12ஆம் திகதி நடைபெற உள்ளது.

ஆண்டு6தொடக்கம் ஆண்டு 13 வரையான பாடசாலை மாணவர்க்கான இப்போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை மேற்படி ஆலயம் மற்றும் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வடக்கு - கிழக்குமாகாணத்திற்கு

# எழுபத்தியெட்டு பிராந்திய அரச அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத் [illegible]

கப்படவுள்ளனர் என்றும்,

மேலும் எழுபத்தியெட்டு [illegible]

உயர்

கலைக் கல்லூரி

# வில்லிலில்லி இன்று புறப்பாடு

யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருள்களையும், கல்வித்திணைக்களத்திற்கான இலவச பாடநூல்கள் மற்றும் தபால் பொதிகளையும் ஏற்றிக்கொண்டு வில்லிலில்லி கப்பல் கொழும்பிலிருந்து இன்று புறப்படுகிறது.

கிளிநொச்சிக்கு கடந்த வாரம் 26 லொறிகளிலும், முல்லைத்தீவுக்கு 22 லொறிகளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

# ஏப்ரல் 5 இல் சூரியன் நேருச்சம்.

ஏப்ரல் 5 முதல் மீண்டும் இலங்கைக்கு மேலே நேர் உச்சிக்கு சூரியன் வரவிருப்பதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வானிலை நிலையத்தின் தகவலில் மேலும் ஏப்ரல் 5 முதல் ஏப்ரல் 15 வரையான காலப்பகுதியில் சூரியன் இலங்கைக்கு மேலே நேர் உச்சியில் மையம் கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஜெயலலிதாவை சாந்தப்படுத்த ராவ் கடிதம் எழுதினாராம்

(கொழும்பு)

கச்சதீவைத் திரும்பப் பெறும் நோக்கம் இந்திய அரசுக்கு இல்லை எனவும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சாந்தப்படுத்தவே பிரதமர் நரசிம்மராவ் கடிதம் எழுதியதாகவும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

1974 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்திற்கமைய இலங்கைக்கு கையளிக்கப்பட்ட கச்சதீவை திரும்பப்பெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் அவை கூறியுள்ளன

# 45ம்நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்

16 - 03 - 1981

மறைவு

14 - 02 - 1992

ஏகாம்பரநாதன் கௌரிசங்கர்

(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்)

இன்னும் சில நாளில்
பதினொரு ஆண்டை
இன்பமுடன் நிறைவு செய்வாய்
என்றே அவலுடன் காத்திருந்தோம்

# காணாமற் போனோருக்கு மரணச் சான்றிதழ்

காணாமற் போனோருக்கு தற்காலிக மரணச் சான்றிதழ் வழங்குவது குறித்த பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்கொண்டு வருவதாக அமைச்சு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்காலிகமாக வழங்கப்படும் இந்த மரணச் சான்றிதழைப் பயன்படுத்தி காணாமற் போனவரின் குடும்பத்தினருக்கு அவர் குறித்த நஷ்டஈடு, ஊழியர் சேமலாபநிதி முதலியவற்றை பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமே இது செல்லுபடியானதாகும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடு மற்றும் இதர கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பண்ணை முகாமையாளர் தேவை

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விரைவில் ஆரம்பமாக இருக்கும் மாதிரிப் பண்ணை பயிற்சி நிலையத்திற்கு கீழ்வரும் தகுதியுடைய முகாமையாளர் தேவை.

முன் அனுபவம்: பண்ணை நடத்தியதில் 5 வருட அனுபவம்

தகைமை:- விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை:- 35 - 50 வரை

ஊதியம் ; தகைமைக்கேற்ப

தொடர்பு:- 10. 04. 1992 இற்கு முன் கீழ்க் காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
இல:3, கண்டிவீதி,
பஸ்தியான் சந்தி,
யாழ்ப்பாணம்.

(2345)

கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ d BASE III+

★ LOTUS 1-2-3

★ WORD STAR - 2000+

வடக்கு - கிழக்குமாகாணத்திற்கு

## எழுபத்தியெட்டு பிராந்திய அரச அதிபர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 78 புதிய பிராந்திய அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிறுவப்பட்டு வரும் ஒருங்கிணைக்கப்பட்ட பிராந்திய செயலகங்களை நிர்வகிப்பதற்கு 230 பிராந்திய அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும்,

மேலும் எழுபத்தியெட்டு பிராந்திய அரசாங்க அதிபர்களை வடக்குக் கிழக்கில் கடமையாற்ற நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்றும்,

மொத்தம் முந்நூற்றி இருபத்தியெட்டு புதிய நிர்வாகப் பகுதிகள் இவர்களின் நிர்வாகத்தின்கீழ் வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

களை மேற்படி ஆலயம் மற்றும் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


### உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி

பேராதனை பல்கலைக் கழக G. A. Q 92 / 93 மாணவர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வந்துள்ளன. பதிவதற்கான இறுதித் திகதி:- 05. 04. 92

(சி/4116) பதிவாளர்




### ஏகாம்பரநாதன் கௌரிசங்கர்
(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்)

இன்னும் சில நாளில்
பதினொரு ஆண்டை
இன்பமுடன் நிறைவு செய்வாய்
என்றே ஆவலுடன் காத்திருந்தோம்
அன்பே அகால வேளையிலே
எம்மைப் பிரிந்து விட்டாய்
ஆறாத சோகத்தால்
வாடுகிறோம் நாமும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்

(2344)


### கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ d BASE III+
★ LOTUS 1-2-3
★ WORD STAR - 2000+

★ புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★ தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.
★ செய்முறை பயிற்சிகள் ஜெனரேற்றர் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

தேவை

I. B. M. கம்பியூட்டரும், ஜெனரேட்டரும் விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.



யுனிக்கோ
கம்பியூட்டர் சென்ரர்

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4117)


# தியாகச் சுடர் அன்னை பூபதியின்
# 4 ஆம் ஆண்டு நினைவு

அன்னியப் படை கதியிழந் தோடிட
இன்னரும் பல சாதனை செய்தவர்
எண்ணியே ஒரு மாதமும் தன்னையே
உண்ணிலா பெரு நோன்பினி லழித்தவர்
தென்தமிழ் ஈழம் பெற்றநற் திருவே
பின்னையி லெம்பணி உணர்த்தி நின்ற
அன்னையே உனைப் போற்று கின்றோமே
இன்னரும் சுப்பர் மடத்து மக்கள்.



அன்னைக்கு விழா வெடுத்து நினைவு கூரும் இந்நாளில் என்றும் அவர் புகழ் வாழ வாழ்த்தும்;

சுப்பர்மடம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம்
சுப்பர்மடம் முனீஸ்வர ஆலய பரிபாலன சபை
சுப்பர்மடம் ஐக்கிய நாணய சங்கம்
சுப்பர்மடம் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

சுப்பர்மடம் சித்திவிநாயகர் பதிப்பகம்
சுப்பர்மடம் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

(2343)

## நினைவு கூருகின்றோம்...
## 1992. 03. 29

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ முருகப்பன் உலகநாதன் (அக்கறைப் பற்று அம்பாறை)

1989-ம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

சல்மான் (மூர்த்தி-காதிஅபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப். சதீஸ் (திருநாவுக்கரசு சிறிதரன்- நெடியகாடு, வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரன் முருகப்பன் உலகநாதன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-4115)

## சிந்தனைக்கு

எய்தவன் இருக்க அம்புகளை நோவதில் பயனில்லை.
— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 29-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 021-2839 நிர்வாகபீடம் 2308

# அதிகாரிகளை நட்டாற்றில் கைவிடும் அரசியல்வாதிகள்

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல சிறிலங்கா இரகசியப் பொலிசாரினால் தேடப்பட்டு வருகின்றார். சட்டத்தரணி விஜயதாச லியனாராய்ச்சி பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது இறந்தமை தொடர்பாக திரு உடுகம்பொல விசாரணைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்ற நீதிமன்றக் கட்டளையை அடுத்து இவரைத் தேடிச் சென்ற இரகசியப் பொலிஸார் அவர் தமது வீடுகளில் இல்லை என அறிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல ஆயிரக் கணக்கான கொலைகளுக்குப் பொறுப்பானவர் எனப் பலராலும் பேசப்படுகின்றது.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் 60000க்குமேற்பட்ட ஜே. வி. பி. யினரை சிறிலங்கா ஆயுதப் படையினர் மிருகத்தனமாக வேட்டையாடியதில் பெரும் பங்கு இவருக்கு உண்டு எனக் கூறப்படுகிறது இதனால் சிறிலங்கா அரசாங்கத்தைப் பாதுகாத்ததில் கணிசமான பங்கும் இவருக்கு இருந்ததெனலாம்.

அன்று இவ்வாறான மிருகத்தனமான வேட்டையை சிறிலங்கா அரசாங்கம் போற்றிப் புகழ்பாடியது. திரு உடுகம்பொல போன்ற பொலிஸ் அதிகாரிகளும், சில இராணுவ அதிகாரிகளும் இல்லாவிட்டால் பிரேமதாசா அரசாங்கம் சிலவேளை ஜே.வி.பி. யினால் தூக்கி எறியப்பட்டும் இருக்கலாம். இந்நிலையில், அன்று உடுகம்பொல போன்ற பொலிஸ் அதிகாரிகளிடம் குளிர்காய்ந்த சிறிலங்கா அரசியல்வாதிகள் இன்று தமக்கு நெருக்கடிகள் வரும்போது பொலிஸ் அதிகாரிகளின் தலையில் பழியைச் சுமத்திவிட்டுத் தட்டிக்கப் பார்க்கின்றனர்.

உடுகம்பொல போன்றவர்கள் இவ்வாறான நடவடிக்கையில் கண்மூடித்தனமாக ஈடுபடுவதற்குக் காரணகர்த்தாக்கள் யார்? வடகிழக்கில் தமிழ்மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு ...

# நெருக்கடி நிலையில் ஐ. தே. கட்சி;
# திருப்தியற்ற நிலையில் எதிர்க்கட்சிகள்

**-மேர்வின் டி. சில்வா**

அரசியல் குற்றப் பிரேரணை தோல்வி கண்ட பின்னர் சிறிது காலம் அரசியலில் பந்தமான குழப்பமான நிலை காணப்பட்டது. அதன் பின்பு மெதுவாக ஆனால் உறுதியாக அரசாங்கம் தனக்கு பலமட்டங்களிலும் இருந்து எதிர்ப்பு

> பிரபல அரசியல் விமர்சகர் மேர்வின் டி. சில்வாவினால் 'லங்கா கார்டியன்' மார்ச் 1 ஆம் திகதிய இதழில் எழுதப்பட்ட கட்டுரையின் மொழியாக்கம் இது.

கிளம்பி வருவதாக உணரத் தொடங்கியுள்ளது எனினும் தெரிந்தோ, தெரியாமலோ இந்த எதிர்க்கும் சக்திகளிடையே ஒருங்கிணைந்த திட்டம் எதுவும் இருப்பதைக் காணமுடியவில்லை. பிரேமதாசாவிற்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்ற ஒரு அம்சம் இவர்களை வகைப்படுத்துவதாக உள்ளது. ஆனால் ஒன்றை ஒன்று குறுக்கிடும் வகையில் செயற்படுகின்றன.

இதனால் ஐக்கியத்தைவிடப் பிரிவினைகளும், இசைந்து போவதற்குப்பதில் சந்தேகங்களும், தேசிய அரசியலின் தன்மையாக மாறிப்போயுள்ளது. ஜனநாயக மீட்புக்காக எழுந்து நிற்பதாகக்கூறும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பாரிசில் உதவி வழங்கும் நாடுகள் குழுக் கூட்டத்தின் போது ''நல்ல அரசு மனித உரிமைகளைத் தழுவி நிற்க வேண்டும்'' எனக் கூக்குரலிட்டதன் மூலம் தன்னை வெளிப்படுத்திக்காட்டியுள்ளது ''தனி மனித நாடகம்'' என்பதற்குப் பதிலாக ஜனநாயகம் என்பதைவலியுறுத்துகின்றது. இந்தஒரு சுலோகத்தை தெரிவு செய்ததன் வாயிலாக ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி [ஜ ஐ.தே மு] தீவிர சர்வதேச சக்தியாக தனது பிறப்பிலேயே காட்டியுள்ளது பூகோளம் முழுவதிலும் 'சர்வாதிகாரி' ...

யும் விரைவான தேர்தலையும் தேர்தல் மூலமான வெற்றியையும் நாடி நிற்கின்றது.

உத்தியோக பூர்வமான எதிர்க்கட்சியான சிறில.சு கட்சி தனது பழைய பௌத்த சிங்கள ஆடையைப் புனைந்து கொண்டுள்ள அதே வேளை அநுரத்த ரத்வத்த மற்றும் சந்திரிகா குமாரணதுங்க போன்ற முற்போக்கு சக்திகளால் போடப்படும் அழுத்தம் காரணமாக மனித உரிமை விவகாரங்களையும், முன்னெடுத்து வருகின்றது ஏற்கனவே பிளவுபட்டும், சந்தேகத்தால் சூழப்பட்டுப்போயுள்ள சிறில சு. கட்சியில் சந்திரிகா குமாரணதுங்க, அநுரத்த ரத்வத்த போன்ற தமது பிரத்தியேக நலன்களின் பால் நாட்டம் கொண்ட சக்திகள் மேலெழுவதை இது காட்டுகின்றது. திருமதி பண்டாரநாயக்காவோ அல்லது பதில் தலைவரோ ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட (லலித் அல்லது காமினிபோன்றோரின்) அல்லது அரசியலரங்கில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஏனையோரின் ஆளுமைகளோடு போட்டியிடக் கூடியவராக இல்லை என்பது சிறில. சு.கட்சிக்குள் தற்பொழுது எழுந்துள்ள அபிப்பிராயமாகும்.

ஜ.ஐ.தே முன்னணி தனது சொந்த தத்துவங்களுக்குள்ளாகவே முடங்கிப்போயுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசா மட்டும்தான் நாட்டைப்பிடித்துள்ள ஒரே ஒரு பிரச்சினை என்று அவர்கள் கருதவில்லை. ஜனாதிபதி ஆட்சிமுறையே மாற வேண்டும் என அதுகருதுகின்றது பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலம் இருந்தால் மட்டுமே ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்றத்தைப் பலம்பெறச் செய்யமுடியும். அரசியலமைப்பு ரீதியான மாற்றத்திற்கு சிறில.சு.கட்சியும் ஆதரவு தெரிவிக்கின்றது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் அதற்கு முன்பாக நடத்தப்படவேண்டும் என அது கோருகி...

தலில் நிறுத்தினால் பிரேமதாசா வெற்றி பெறலாம். ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் தமது வேட்பாளரை நிறுத்தாவிட்டால் பிரேமதாசா அல்லது திருமதிபண்டாரநாயக்கா வெற்றி பெறக்கூடும் ஆனால் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி தனது பலத்தை இழக்க நேரிடலாம்

மற்றொரு முக்கிய திருப்பமாக முக்கியமான சிலர் கிளப்பும் சர்ச்சைகளை அவதானிக்கலாம். கட்சி சார்பற்ற முறையில் சிங்கள பாதுகாப்பு முன்னணியை அமைக்கப் போவதாகக் கூறும் முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியா தொண்டமான் முன் வைத்த யோசனைகளை ஆகக் கூடுதலாகப் பயன்படுத்தி வருகின்றார். நாங்கள் எல்லோரும் சிங்களவர் என்ற வகையில் சிறில. சு.கட்சியானாலும் ஐ. ஐ. தே. முன்னணியானாலும் அங்கீகரிக்கவேண்டிய அம்சமாக இது இருந்தாலும் முழுமையாக ஒத்துப்போக முடியாததொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

பிரச்சினையின் அடிப்படையிலன்றி சம்பவங்களின் அடிப்படையில் இலக்குகளை வகுத்துக் கொண்டிருப்பதுவே சிங்கள பாதுகாப்பு முன்னணியின் குறைபாடு எனலாம். உதாரணமாக யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசப்போகிறேன் என்று தொண்டமான் அறிவித்தமாத்திரத்திலேயே அவருக்கு பல திசைகளிலும் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. அவர் தனது பயணத்தை ஒத்திப்போட்டதும் சிங்கள பாதுகாப்பு முன்னணி தனது இலக்குகளில் ஒன்றை இழந்தது. அதன் பின்னர் சிங்களவர் எதிர்நோக்கும் புதிய ஆபத்துக்கள் பற்றி காமினி ஜயசூரியா பிரஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளார். தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள் தனியார் மயமாக்கல் அல்லது வர்த்தக மயமாக்கல் என்ற அறிவித்தலைத் தொடர்...

போகின்றது எனப் பீதி கிளப்பப்பட்டது, தொண்டமான் மீண்டும் ஒருமுறை யாழ்ப்பாணம் போவதான அறிவிப்பு செய்யும் வரை தொண்டமான் முன்வைத்த யோசனைகள் தொடர்பான சர்ச்சை கைவிடப்பட்டுவிட்டது.

அதாவது சுருங்கச் சொன்னால் தொண்டமானையும் இந்தியத் தமிழர்களையும் விட்டால் சிங்கள பாதுகாப்பு முன்னணிக்கு எதிரிகளைத் தேடுவதே சிரமமானதாகும்.

ஆனால் சிறில.சு கட்சியினுள் பிறப்பெடுத்திருக்கும் ஹெல உறுமயவினர் காமினி ஜயசூரியாவின் மேடைப்பேச்சாளர்களாகியுள்ளனர். திலக் கருணாரத்தினா, டாக்டர் நெவில் பெர்னான்டோ, ஜினதாச நியதபாலா, எஸ். எல். குணசேகரா போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஐக்கிய தேசிய கட்சி பௌத்த சிங்கள இனவாதத்தைப் பயன்படுத்துவதைக் காட்டிலும் சிறில. சு கட்சியே இத்தகைய உணர்வோடு சாதாரண சிங்கள மக்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ளது.

இக் காரணத்தினால் காமினி ஜயசூரியா தொடங்கி வைத்திருப்பதைப் பூர்த்தி செய்ய ஹெல உறுமயவினால் முடியும். ஆனால் இதன் எதிர்காலம் சுதந்திரக் கட்சியின் தலைமைப் போட்டியின் இழுபறியிலும் தங்கியுள்ளது. திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்தும் தலைமைப் பதவியை தக்கவைத்துக் கொள்வார் என்றே நம்புகின்றேன். ஆனால் திருமதி பண்டாரநாயக்காவினால் தீவு முழுவதிலும் சென்று தனது தலைமையைத் தக்கவைப்பதற்கான பிரசாரத்தில் ஈடுபட முடியுமா என்பது கேள்விக்குரியதே. அப்படியானால் தற்போதைய பதில் எதிர்க்...

படிப்படியாக கையளிப்பாரா அவ்வாறெனின் கட்சித் தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவரான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் நிலை என்னவாகவிருக்கும்?

ஐ.ஐ.தே.முன்னணி என்பது வயது நிரம்பிய சட்டத்தரணியான மதிப்பு மிக்க சி. வி. குணரத்தினாவை தலைவராக நியமித்துள்ளது. ஏற்கனவே உள்ள ஏழு உப தலைவர்களுடன் சேர்த்து காமினி திசாநாயக்காவையும் லலித் அத்துலத்முதலியையும் உபதலைவர்களாக்கியுள்ளது. இதன்மூலம் சர்ச்சைகளையும், மன உலைச்சல்களையும், குழப்பங்களையும் தவிர்க்க முன்னணி முயற்சித்துள்ளது தெளிவாகின்றது. ஆனால் சிறிலங்காவில் தத்துவங்கள் கொள்கைகள் என்பவற்றைவிட தனி மனித ஆளுமைதான் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று பார்த்தால் எதிர்க்கட்சிகள் முன்வைத்த அரசியல் குற்றப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆட்சிமுறை தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது வங்கிகள், தேயிலைத் தோட்டங்கள் ஏயர் லங்கா போன்ற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் எதிர்ப்பு மேலோங்கியுள்ளது ஆனால் நன்கு திட்டமிட்ட ரீதியில் ஒருங்கிணைந்தஎதிர்ப்புகாட்டப்படுவதாக இல்லை. இது ஜனாதிபதி முறையைத் தாக்குகிறது. ஆனால் பாதிப்பை ஏற்க வேண்டியுள்ளது ஆனால் பிரச்சினை வாரியாக மேலெழும் எதிர்ப்புணர்வு முறைகளை மேற்கொள்ளும் முறையில் இருக்கும் குறைபாட்டையே எடுத்துக்காட்டுகின்றது. பல்வேறு துறைகளிலும் ...

நிலையில், அன்று உடுகம்பொல போன்ற பொலிஸ் அதிகாரிகளிடம் குளிர்காய்ந்த சிறிலங்கா அரசியல்வாதிகள் இன்று தமக்கு நெருக்கடிகள் வரும்போது பொலிஸ் அதிகாரிகளின் தலையில் பழியைச் சுமத்திவிட்டுத் தப்பிக்கப் பார்க்கின்றனர்.

உடுகம்பொல போன்றவர்கள் இவ்வாறான நடவடிக்கையில் கண்மூடித்தனமாக ஈடுபடுவதற்குக் காரணகர்த்தாக்கள்யார்? வடக்குகிழக்கில் தமிழ்மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆரம்பத்தில் அது தமிழருக்கு எதிரான சட்டம் என்றே சகல சிங்களத்தலைவர்களினாலும் - இடதுசாரிகள் உட்பட - பார்க்கப்பட்டது. ஆனால், அச்சட்டம் இலங்கை முழுவதுக்குமானது என்பதையோ, அன்றி ஆயுதப்படையினருக்கு அளவில்லாத அதிகாரங்களை வழங்குகின்றது என்பதையோ எவரும் கவனத்திற் கொள்ளவில்லை.

மேலும் அரசாங்கம் பயங்கரவாதச்சட்டத்தின் பின் 1987 இல் கொண்டுவந்த ஆயுதப்படையினருக்கு குற்றங்களில் இருந்து விலக்களிக்கும் விசேட சட்டம் ஆயுதப்படையினருக்கு மேலும் சலுகைகளை வழங்கியது. இச்சட்டம், குற்றம் என்று தெரிந்தும் ஆயுதப்படையினர் அதனைச் செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்நிலையிலேயே உடுகம்பொல போன்றவர்கள் தமது இஷ்டத்தின்படி படுகொலைகளை செய்துகுவிக்க வாய்ப்பு ஏற்பட்டது. அதாவது சிறிலங்கா அரசாங்கம் எதற்காக இச்சட்டமூலங்களை ஆக்கியதோ அதனை இலக்காக கொண்டே இப்படுகொலைகள் புரியப்பட்டன. அதாவது படுகொலைகளைப் புரிந்தவராக அல்லது கட்டளை இட்டவராக உடுகம்பொல இருந்தாரே ஒழிய படுகொலைகளை புரியத் தூண்டியவர்களும், அதற்குச் சட்ட அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தவர்களும் அரசியல்வாதிகளே.

அத்தோடு, இப்படுகொலைகளின் பின்னரும், அரசியல்வாதிகளினால உடுகம்பொல போன்றவர்கள் அரசாங்கத்தினால்பாராட்டிக்கௌரவிக்கப்பட்டனர். கௌரவங்களும் வழங்கப்பட்டன. அவரின் கீழ் தனி பொலிஸ் பிரிவு -விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு - குற்றப்புலனாய்விற்கென அமைக்கப்பட்டது. பின்னர் கொழும்பு நகரில், மேற்கொள்ளப்பட்ட குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் - கசினோ, விபசாரம், கடத்தல் - போன்றவற்றில் உடுகம்பொலவின் பெயர் பிரபல்யமாக அடிபட்டது அரசாங்கத்தாலும் அரசியல் வாதிகளினாலும் பெரும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்று அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் நெருக்குதல்கள் உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் அதிகரித்துள்ளமையினால், தமக்கு இலக்குகளை அடைவதற்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளின் தலையில் பழியைச் சுமத்திவிட்டு அரசியல்வாதிகள் தப்பிக்க முற்படுகின்றார்கள். முதலில் பதவியைப் பறித்து வீட்டிற்கு அனுப்பினார்கள். தற்பொழுது கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த முற்படுவதுபோல் காட்டிக்கொள்கின்றார்கள்.

ஆனால் உடுகம்பொலவைச் சட்டத்தின் முன் கொண்டுவர சிறிலங்காவின் உயர் ஆட்சித்தலைவரில் இருந்து அடிமட்ட அரசியல்வாதிகள் வரை விரும்பப் போவதில்லை. ஏனெனில் உடுகம்பொல சட்டத்தின் முன் வரும்போது தனியாக அவருடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் படுகொலைகள் மட்டும் வெளிவரப்போவதில்லை. இதில் எய்தவன் யார் அடிபட்டவன்யார் என்பது போன்ற சகல விடயங்களும் வெளிவரும். இதில் உடுகம்பொலவைவிட நட்டமடைபவர்கள் பெரும் அரசியல் தலைவர்களாகவே இருக்கும் என்பதில்சந்தேகமில்லை. இந்நிலையில் உடுகம்பொல சட்டத்தின் முன்கொணடுவரடபடுவாரா?

கம்'' என்பதற்குப் பதிலாக ஜனநாயகம் என்பதைவலியுறுத்துகின்றது. இந்தஒரு சுலோகத்தை தெரிவு செய்ததன் வாயிலாக ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி[ஜ ஐ.தே மு] தீவிர சர்வதேச சக்தியாக தனது பிறப்பிலேயே காட்டியுள்ளது பூகோளம் முழுவதிலும் 'சர்வாதிகாரி' முறியடிப்பதற்கு தேர்தலைக் கோருவதைப் போலவே ஜ ஐ தே.மு,

மட்டுமே ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்றத்தைப் பலம்பெறச் செய்யமுடியும். அரசியலமைப்பு ரீதியானமாற்றத்திற்கு சிறில.சு.கட்சியும் ஆதரவு தெரிவிக்கின்றது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் அதற்கு முன்பாக நடத்தப்படவேண்டும் என அது கோருகிறது ஐ தே.கவிலிருந்து வெளியேறியோர் தமது சொந்த வேட்பாளர் ஒருவரைத் தேர்

ஒன்றை இழந்தது. அதன் பின்னர் சிங்களவர் எதிர்நோக்கும் புதிய ஆபத்துக்கள் பற்றி காமினி ஜயசூரியா பிரஸ்தாபிக்கத் தொடங்கியுள்ளார். தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள் தனியார் மயமாக்கல் அல்லது வர்த்தக மயமாக்கல் என்ற அறிவித்தலைத் தொடர்ந்து மலையகம் வடக்கு கிழக்குப் பகுதியை உள்ளடக்கிய ஈழத்தின் ஒரு பகுதியாகப்

துக் கொள்வார் என்றே நம்புகின்றேன். ஆனால் திருமதி பண்டாரநாயக்காவினால் தீவு முழுவதிலும் சென்று தனது தலைமையைத் தக்கவைப்பதற்கான பிரசாரத்தில் ஈடுபட முடியுமா என்பது கேள்விக்குரியதே. அப்படியானால் தற்போதைய பதில் எதிர்க்கட்சித்தலைவரும், தேசிய அமைப்பாளருமான அநுராவிடம் கட்சித் தலைமையை

முறையைத் தாக்குகிறது. ஆனால் பாதிப்பை ஏற்க வேண்டியுள்ளது ஆனால் பிரச்சினை வாரியாக மேலெழும் எதிர்ப்புணர்வு முறைகளை மேற்கொள்ளும் முறையில் இருக்கும் குறைபாட்டையே எடுத்துக்காட்டுகின்றது. பல்வேறு துறைகளிலும் ஒருங்கிணைந்த செயறபாடின்மையையே புலப்படுத்துவதாகவுள்ளது.

# 16 பேருக்கு ஒருவர் அகதிமுகாமில் தஞ்சம் அடைய வேண்டிய அவலம்

## -மேர்ஜ் இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் நாட்டில் பதினாறு பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பலர் அனாதரவற்றவர்களாகி அகதிமுகாம்களில் தஞ்சமடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது என நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் (மேர்ஜ்) உபதலைவர் சாரிள்ஸ் அபயசேகரா கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கலந்துகொண்ட கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜயதேவ உயங்கொட பேசுகையில்,

வடக்கு - கிழக்கு யுத்தம் பற்றி அமைச்சர் தொண்டமான் ஆலோசனைகளை முன்வைத்தபோது ஜனாதிபதி மௌனம் சாதிக்காமல் தீர்வுக்கான நடைமுறைகளை ஊக்குவிக்கக் கூடிய தன்மைகளை கொண்டவை என்று இந்த ஆலோசனைகளை அரசியல் தீர்வை நோக்கிய கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விட்டிருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வை நோக்கிய அரசியல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவித்தார்

மேலும் மறுபுறத்தில் அமைச்சர் தொண்டமானின் ஆலோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம் உயிர்பெற்று முன்வந்த சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் செயலிழப்பதற்கும் ஊக்கியாயிருக்கும்.

அரசியல் தீர்வுக்கான நடைமுறைகளை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மேற்கொள்வதன் மூலம் தான் சமாதானத்திற்கான கருத்து ஒற்றுமையை அடைய முடியும்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் அரசியல் தீர்வை முன்வைக்க தவறுமேயானால் ஐ.நா. சபை போன்ற சர்வதேச அமைப்புக்களின் தலையீட்டின் மூலமாக இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

எனவே தமிழ்மக்களின் முறையான நம்பிக்கையை பெற வேண்டுமாக இருந்தால் முறையான அதிகார பங்கீட்டை அடிப்படையாக கொண்ட தீர்வை முன்வைக்கவேண்டும். அது தறபோதுள்ள மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை விட கூடுதலான அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

# திருமதி சரவணமுத்துவுக்கு சார்பாக நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக டாக்டர் மனோராணி சரவணமுத்து தாக்கல் செய்த வழக்கில் உயர் நீதிமன்றம் சரவணமுத்துவுக்குச்சார்பாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சட்டத்தின்முன் யாவரும் சமம் என்றுகூறும் அரசியல் சாஸனத்தைப் பொலிஸ் அதிகாரிகள் நடத்தை அவமதித்திருக்கிறது என்று உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பில் காட்டியிருக்கிறது.

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கடத்திச் சென்று கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் றிச்சேட் டி சொய்சாவின் தாயாரே சரவணமுத்து.

தனது மகன் றிச்சேட்டைக் கடத்திச் சென்றவர் உயர் பொலிஸ் அதிகாரி என்று அவர்மீது வழக்குத் தொடர்ந்தார் மனோராணி சரவணமுத்து.

ஆனால் இவ்வாறு உயர் பொலிஸ் அதிகாரிமீது வழக்குத் தொடர போதுமான ஆதாரங்கள் இல்லை எனசட்டமா அதிகாரி அறிவித்தார். இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி திருமதி சரவணமுத்துவிடம் இருந்து 10 லட்சம் ரூபா மான நஷ்டம் கோரி வழக்குத் தாக்கல் செய்தார். இவ்வழக்கில் பதிலளிக்க தமக்கு வேண்டிய ஆவணங்கள் பொலிசாரிடம் இருக்கின்றன. அவற்றைத் தருவதற்கு பொலிசார் மறுக்கின்றனர் என்று உயர் நீதிமன்றத்தில் திருமதி சரவணமுத்து பதிலளித்தார்.

இதைத்தொடர்ந்து ஆவணங்களை காண்பிப்பதற்கு பொலிசார் மறுத்தது உண்மை என்பதால் உயர் நீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியிருக்கிறது, இவ்வழக்கில் திருமதி சரவணமுத்து செலவிட்ட பணத்தை பொலிசார் திருப்பி வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

யாழ். சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

# அறிமுகமும் ஆய்வரங்கும் நெல்லியடியில் இன்று

(யாழ்ப்பாணம்)

சாளரம்வெளியீடான 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற நூலின் அறிமுகமும், ஆய்வரங்கும் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்அரங்கில் உடுப்பிட்டி அ மி கல்லூரி அதிபர் ந. ஆனந்த்ராஜ் வரவேற்புரையை ஆற்ற இருப்பதோடு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் யோகரட்ணம் யோகி, பலாலி ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி அதிபர் வி. கே. நடராசா மற்றும் தெணியான்ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

அனைவரையும் இவ் அரங்கில் கலந்துகொள்ளுமாறு சாளரம் வெளியீட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஆலோசனை

திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள உயிரியல் வாயு கூடங்கள், சூத்திரங்கள் போன்றவற்றைத் திருத்துவதற்கும், திருத்தி மீள அமைப்பதற்கான ஆலோசனை வழங்குவதற்கும்தமிழீழ ஆய்வு நிறுவனம் தயாராகவுள்ளது. திருத்தி அமைத்துக் கொள்வதற்கு அல்லது இது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புவோர் திருநெல்வேலியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சக்திப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

# தமிழீழத்தின் பிரச்சினை குறித்த ஆய்வுகள் தேவை

## - யோகி

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்தே ஆய்வுகள் முன்வைக்கப்படவேண்டும்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ''தமிழீழ நோக்கு'' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் சிறப்புரை வழங்கிய போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்

பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவின் சஞ்சிகை வெளியீட்டுரையினை கலாநிதி சபா ஜெபராஜாவும். வாழ்த்துரைகளை விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரனும் ஆய்வுரைகளை பேராசிரியர் கா. சிவத்தம்பியும், பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் திரு. மு. திருநாவுக்கரசு அவர்களும் நிகழ்த்தினர்.

(த)

# இன்றைய போட்டிகள்

யாழ்.மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்கு பிரிவுக்கான போட்டியில் இன்று சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி ஏழாலை மயிலங்காடு ஞானகலா அணியை எதிர்த்து மோதவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் பி. ப. 3-00 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான போட்டியில் உடுவில் ஒவ் புறாஸ் அணி நவாலி முரசொலி அணியை எதிர்த்து ஆடவுள்ளது. இப்போட்டி சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் பி. ப. 4-15 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழநாதம்

# குடியகல்வு சட்டத்தில் மாற்றம்; சட்டத்தை மீறின் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வு அதிகார சட்டத்தில் திருத்தமான மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றன. இந்த அதிகார சட்டத்தின் நிபந்தனைகளை மீறுபவர்களுக்கு எதிராக ஆகக் கூடுதலான கடும் தண்டனை வழங்க சிபாரிசு செய்யப்பட வேண்டுமென்பதே இத்திருத்தத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் கில்டர் பெர்னாண்டோ மேலும் தகவல் தெரிவிக்கையில், 1948 ஆண்டு தொடக்கம் இந்த அதிகார சட்டம் செயற்பட்டு வருகின்றது. எனினும் இப்போது மேற் கொள்ளப் படவிருக்கும் திருத்தங்களின் படி ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட பிரயாண ஆவணங்களை ஒரே நேரத்தில் வைத்திருத்தல் குற்றமாகும் எனவும், செல்லுபடியாகக் கூடிய கடவுச்சீட்டை வைத்திருக்கும் ஒருவர் பிறிதொரு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல், சட்டமூலமான அங்கீகாரமின்றி வேறொருவரின் கடவுச்சீட்டை வைத்திருத்தல், அதிகாரமின்றி பயண ஆவணங்களை இலங்கையிலிருந்து வெளியிலும், வெளியிலிருந்து இலங்கைக்கு உள்ளும் அனுப்புவது குற்றமாகும் எனவும் தெரிவித்தார். அத்துடன் பிரயாண ஆவணங்களை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் நீதி மன்றங்களுக்கு வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# அயோத்திக்கு சர்வகட்சிக் குழு உடன் அனுப்பப்பட வேண்டும்

## இந்திரஜித்குப்தா

(டில்லி)

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழுவொன்று காலதாமதமின்றி அயோத்திக்குச் சென்று உண்மைத் தகவல்களை அறிய முயற்சி செய்யப்படவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்திரஜித் குப்தா இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பேசுகையில் தெரிவித்தார்.

பாபர் மசூதி - ராம ஜென்ம பூமி விவகாரம்- இந்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்றுப் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

இது தொடர்பாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். கே. அத்வானி அரசியல் உள்நோக்கங்களுக்காக பாராளுமன்றம் பயன்படுத்தப்படுவதாக கண்டனம் செய்ததுடன் இத்தகைய தூதுக்குழுவை அனுப்புவது ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்திவிடுமெனவும் எச்சரித்தார்.

சர்ச்சைக்குரிய பாபர் மசூதி - ராமஜென்ம பூமி ஆலய வளாக வளவில் உத்தரப்பிரதேச சுற்றுலாத்துறை சில கட்டடங்களை எழுப்புவது தொடர்பாக அண்மைய சர்ச்சை எழுந்துள்ளமை தெரிந்ததே,

அயோத்தியில் இருக்கும் பாபர் மசூதி - ராம ஜென்ம பூமி ஆலய வளாகத்திற்கு நேரில் விஜயம் செய்து உண்மைத்தகவல்களை கண்டறிய நியமிக்கப்படும் பாராளுமன்றக்குழுவிற்கு தத்தமது கட்சி உறுப்பினர்களின் பெயர்களை சிபாரிசு செய்யுமாறு இந்திய அரசாங்கம் பாராளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளுக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

## போபால் விஷவாயு வழக்கு

# நிறுவன முன்· தலைவரை கைது செய்ய உத்தரவு

(டில்லி)

போபால் விஷ வாயு தொடர்பான வழக்கில் ஆஜராகாமல் இருந்தமைக்காக அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான யூனியன் கார்பயிட் கோர்ப்பரேஷனின் முன்னாள் தலைவர்வாடின் அன்றசானை விசாரணை செய்வதற்காக இந்தியா அனுப்பும்பொருட்டு போபால் தலைமை நீதிபதி கைது உத்தரவு பிறப்பித்துள்ளார். இது பிணையில்லாத கைது உத்தரவாகும்.

மத்திய புலனாய்வுத் துறையில் வேண்டுகோளின் பேரிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய நீர்மூழ்கிகள் ஈரானுக்கு

(மாஸ்கோ)

ரஷ்யா ஈரானுக்கு மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களை விற்கத் தீர்மானித்திருப்பதாக ரஷ்ய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாடுகளுடான பொருளாதார உறவுக்கான அமைச்சு இத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ரஷ்யாவின் கடற்படைத் தளபதி ஈரானுக்கும், ரஷ்யாவிற்கும் இடையே இத்தகைய உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதாக வெளிவந்த செய்திகளை மூற்றாக மறுத்திருந்தது தெரிந்

# அணுஆயுத உடன்படிக்கை இந்தியா கையெழுத்திடாது

[டில்லி]

அணுவாயுத உற்பத்தியைத் தடுக்கும் உடன்படிக்கையில் தான் கையெழுத்திட முடியாது என்று இந்தியா நிராகரித்துள்ளது.

மேலும் தெற்கு ஆசிய நாடுகளை அணுவாயுதமற்ற பகுதியாக்குவதென்ற அமெரிக்காவின் பரிந்துரையையும், ஐந்து நாடுகளின் கூட்டத்தில் பேச வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருப்பதையும் இந்தியா ஏற்காது என வெளியுறவுத் துறை அமைச்சர் மாதவசிங் சோலங்கி லோக்சபாவில் கூறியுள்ளார்.


அணுவாயுதப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்பதை இந்தியா பரிசீலனை செய்ய வேண்டுமேயொழிய, வெளிநாடுகள் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

## சர்ச்சைக்குரிய பகுதி கையேற்பு

## லெப். அகிலன் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியாமாவட்டம் நொச்சிமோட்டையில் கடந்த 21 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது காயமடை



ந்து சிகிச்சை பெற்று வந்த லெப். அகிலன் (சிவசுப்பிரமணியம் சூரியகுமார் பம்பைமடு வவுனியா) நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

## 2 ஆம் லெப். மதுரலிங்கம்

## பெற்றுக் கொள்ளவும்

அன்ரனி றெசிற்றா டயனா 23/2, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (647153020V), புவனேந்திரம் சுதாசினி பருத்தித்துறை வீதி, நீர்வேலி. (7'5610647V), சூரியன் சூரியகுமரேஸ்வரன் கோப்பாய் தெற்கு (540920729V) என்பவர்களது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் கோப்பாய் காவல் துறை பணிமனையில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம் அவசியமா?

## கேள்வி எழுப்புகிறார் கல்விஅதிகாரி

[யாழ்ப்பாணம்]

தொண்டர்ஆசிரியர்கள் மறியல் போராட்டம் அவசியம் தானா, அது நியாயமா அல்லது நியாயமற்றதா என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் தான் தீர்மானிக்க வேண்டும் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வெள்ளியன்று தொண்டர் ஆசிரியர்கள் யாழ் கல்வித் திணைக்களம் முன்னால் நடத்திய மறியல் போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு

லாரி புலிகளின் கோட்டை என்று தெரியப்படுத்தியுள்ளார்கள்' சனி மற்றும் போயா தினங்களில் பாடசாலை நடத்த வேண்டுமென்று ஈழநாதத்தில் வெளிவந்த செய்தி அறிக்கையை என்னிடம் காட்டினார்கள்.

தீவகப் பகுதியில் ஏதாவது ஒரு தீவிலிருந்து ஒரு கல்வி அதிகாரி பணியாற்ற வேண்டுமென்று அமைச்சு எனக்கு கொழும்பில் வலியுறுத்தியது. இது தொடர்பான கடிதமும் எனக்கு இரண்டுவாரங்களுக்கு முன்பே கைக்குக் கிடைத்தது

## வேலணை கல்வி கோட்டம்

# சிறப்புற ஏற்பாடுசெய்த முத்தமிழ் விழா நிகழ்வுகள்

சுண்டிக்குளி சென்.ஜோன்ஸ் அக்கடமியில் கோலாகலமாக நடைபெற்ற வேலணைக் கல்விக் கோட்ட இறுதிநாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை ஏழு மணியளவில் நிறைவு பெற்றது பல்கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், கல்வித் திணைக்கள ஊழியர்கள், மாணவர்கள் உட்படப் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

காலை நிகழ்ச்சிகள் ஒன்பது மணியளவில் நாவலர் அரங்கில் ஆரம்பமாகின. இதனை வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. நல்லையா தலைமைவகித்து ஆரம்பித்து வைத்தார். தேசியக் கொடியைத் தீவக விசேட தளபதி வெற்றி அண்ணாவும், மங்களவிளக்கை யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியும் ஏற்றினார்கள்.

பிரதம விருந்தினராக யாழ் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். வரவேற்புரை வேலணைக் கொத்தணி அதிபர் பொ. கேதாரநாதனால் நிகழ்த்தப்பட்டது.

தமிழ்த் தினப்போட்டிகளில் பங்குகொண்டு சித்தியெய்திய மாணவர்களுக்குச் சான்றிதழ்களைப் பிரதம விருந்தினர் வேலாயுதமும், யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இளம்பரிதியும் வழங்கினார்கள்

இதனைத் தொடர்ந்து பட்டிமன்றம் சிலம்பின் துயரம் விஞ்சி நிற்பது கண்ணகியிடமா மாதவியிடமா? மற்றும் கலைக்கதம்பம், பண்ணிசைக்காவடி ஆகிய நிகழ்ச்சிகளுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மாலை நிகழ்ச்சிகள் விபுலானந்தர் அரங்கில் மாலை 3 மணியளவில் தொடங்கியது. சு.கணபதிப்பிள்ளை உதவிக் கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்) தலைமை வகித்து நடாத்தினார். பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார் மங்களவிளக்கை யாழ். மாவட்ட உதவி அரசியல் பொறுப்பாளர்

தான் கையெழுத்திட முடியாது என்று இந்தியா நிராகரித்துள்ளது.

மேலும் தெற்கு ஆசிய நாடுகளை அணுவாயுதமற்ற பகுதியாக்குவதென்ற அமெரிக்காவின் பரிந்துரையையும், ஐந்து நாடுகளின் கூட்டத்தில் பேச வேண்டும் என்று அமெரிக்கா சோலங்கி லோக்சபாவில் கூறியுள்ளார்.

அணுவாயுதப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்பதை இந்தியா பரீசிலனை செய்ய வேண்டுமேயொழிய, வெளிநாடுகள் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

வுக்கான அமைச்சு இத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ரஷ்யாவின் கடற்படைத் தளபதி ஈரானுக்கும், ரஷ்யாவிற்கும் இடையே இத்தகைய உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதாக வெளிவந்த செய்திகளை முற்றாக மறுத்திருந்தது தெரிந்ததே.

ந்து சிகிச்சை பெற்று வந்த லெப். அகிலன் (சிவசுப்பிரமணியம் சூரியகுமார் பம்பைமடு வவுனியா) நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தான் தீர்மானிக்க வேண்டும் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வெள்ளியன்று தொண்டர் ஆசிரியர்கள் யாழ் கல்வித் திணைக்களம் முன்னால் நடத்திய மறியல் போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணைக் கல்விக்கோட்ட முத்தமிழ் விழா இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறபபுரை வழங்கிய கல்விப் பணிப்பாளர், இத்தகைய மறியல் போராட்டங்களால் கல்வி சீரழியும். ஆசிரியர் சம்பளக் கொடுப்பனவு வழங்க முடியாதநிலை உருவாகும் என்றார்

இதேவேளை இம் மாதம் 20 ஆம திகதி வழங்கப்படவேண்டிய ஆசிரியர் சம்பளம் இன்று வரைவழங்கப்படவில்லை என்பதும் சம்பளம் வழங்குவதற்கு திறைசேரியில் பணம இல்லை என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர் தொடர்ந்து பேசுகையில், தொண்டர் ஆசிரியர்கள் பெயர்களை அமைச்சில் சமர்ப்பித்துள்ளேன். தொண்டர் ஆசிரியர்கள் விபரங்கள் குறித்து அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று திர விசாரிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளேன் என்றும்,

ஒப்பமில்லாத கடிதங்கள் கொழும்பு கல்வி அமைச்சுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாறு நூறுமுறைப்பாடுகள்வரை அங்குள்ளன. யாழ் இந்துக் கல்லூரி தத்தில் வெளிவந்த செய்தி அறிக்கையை என்னிடம் காட்டினார்கள்.

தீவகப் பகுதியில் ஏதாவது ஒரு தீவிலிருந்து ஒரு கல்வி அதிகாரி பணியாற்ற வேண்டுமென்று அமைச்சு எனக்கு கொழும்பில் வலியுறுத்தியது. இது தொடர்பான கடிதமும் எனக்கு இரண்டுவாரங்களுக்கு முன்பே கைக்குக் கிடைத்தது என்றும் தெரிவித்தார்.

அடுத்தமாதமளவில் ஓய்வு பெறவிருக்கும் அவர், தனது ஆவணங்களை அமைச்சில் சமர்ப்பித்தபோது அடுத்த வருடம் 61 வயது என்கிறீகள். மாறாகப் 16 போல் வயது காட்டுகிறது என்றார்கள் என்றும் கூறினார். 'நயின்றி' என்றாலும் உள்ளத்தால்தான் 'ருவன்றி' என்றார்.

னந்தர் அரங்கில் மாலை 3 மணியளவில் தொடங்கியது. சு.கணபதிப்பிள்ளை உதவிக் கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்) தலைமை வகித்து நடாத்தினார். பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டார் மங்களவிளக்கை யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தர்சன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை மண்டைதீவுக் கொத்தணி அதிபர் கைபேரின்பநாயகம் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன நன்றியுரையை சிவலோகநாதன் அதிபர் நிகழ்த்தினார் தேசியக்கொடி இறக்கலுடன் நிகழ்ச்சி இனிதுநிறைவேறியது (பா)

சர்ச்சைக்குரிய பகுதி கையேற்பு

# மத். அமைச்சரின் கூற்றுக்கு உ. பி. முதல்வர் கண்டனம்

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி இராம ஜன்ம பூமியில் சர்ச்சைக்குரிய பிரதேசத்தை மத்திய அரசு பொறுப்பேற்கும் என மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியிருப்பதை உத்தரப் பிரதேச முதலமைச்சர் திரு. கல்யாணசிங் கண்டனம் செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நட்மாவில் செய்தியாளரிடையே பேசிய அவர் பாபர்மசூதி - ராம ஜென்மபூமி பிரச்சினையில் நீதிமன்றத்தினால் தெரிவிக்கப்பட்ட தீர்ப்பையோ அல்லது தேசிய ஒருமைப்பாட்டு சபையின் தீர்மானத்தையோ உத்தரப் பிரதேச அரசு மீறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை இப்பிரதேசத்தை சுற்றியுள்ள பகுதியிலுள்ள இடிபாடுகளை அகற்றும் பணியில் பலர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் இயந்திரங்களும் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## கப்பல் தீ அணைக்கப்பட்டது

(சென்னை)

சென்னைத் துறைமுகத்தில் நேற்று முன்தினம் விஸ்வமாருதி கப்பலில் பிடித்கதீநேற்று அதிகாலை முற்றிலுமாக அணைக்கப்பட்டது.

அதன் ஊழியர்கள் 59பேரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். கப்பலுக்கு ஓரளவு சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது அதன் ஒரு பகுதியில் கடல்நீர் புகுந்துவிட்டது.

பீகாரில்

# சட்டசபை தீர்மானம் நீதிமன்றம் இடைநிறுத்தம்

(டில்லி)

மூன்று எதிர்க்கட்சி எம் எல்.ஏக்களை பதவிநீக்கம் செய்யக் கோரி பீகார் சட்டப் பேரவை கடந்த புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றியிருந்ததைப்பாட்னா உயர்நீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.

இதையடுத்து சபைக்குச் சென்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் இருவரும் பாரதீய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த ஒருவரும் காலையில் கூட்டத் தொடரில் கலந்த பொது சபாநாயகர் நீதிமன்ற ஆணையை ஏற்றுக் கொள்ள முடியாதெனக் கூறி உறுப்பினர்களை வெளிநடப்புச் செய்யுமாறு கோரினார்.

## 2 ஆம் லெப். மதுரலிங்கம் வீரச்சாவு

(நமது நிருபர்)

மன்னார் மாவட்ட சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கடந்த இருபத்திநான்காம் திகதி வெளியேறிய இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது இரண்டாம் லெப். மதுரலிங்கம் (சந்



திரபோஸ் அன்ரன பெர்னான்டோ - ஆஸ்பத்திரி வீதி, மன்னார்) வீரச்சாவடைந்தார் இம்மோதலில்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது இராணுவத்தினர் தமது முன்னேறும் முயற்சியை கைவிட்டு முகாம் திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது

அகதி

களது தாயகத்துக்கு அனுப்பி விடுவதில் இந்திய அரசு தீவிரமாக இருக்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்தார்.

இந்தியாவில் இருக்கும் அகதிகளைத் திருப்பியனுப்பும் விடயம் தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் வெகுவிரைவில் தொடரப்படுமெனவும், தெரிவித்த அமைச்சர் சவான், கச்சதீவுக்கு சமீபமாக இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்பாக சிறிலங்கா அரசு கூறிய கருத்தை இந்திய அரசு ஏற்கவில்லை எனவும், கச்சதீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கை தொடர்பாக மீளப்பரிசிலனை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த பதினாறாம் திகதியன்று கச்சதீவுக்கு அருகே தமிழக மீனவர் மீது துப்பாக்கிபபிரயோகம் செய்தது சிறிலங்கா கடற்படையே எனவும், அப்படகில் ஏழுபேர் இருந்ததாகவும் இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அபாயக்

யில் பணம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இதுவரை அபாயகாலக்கொடுப்பனவுகள் வழங்கப்படாத அரசதிணைக்களங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் தற்போதைக்குவழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று சம்பந்தப்பட்டதிணைக்களங்களின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

அன்னைபூபதி நினைவாக

## உண்ணாவிரதம், சிரமதானம் சனசமூக நிலையங்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கும் அதன் சமாசங்களுக்குமான கூட்டம் ஒன்று நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் அன்னை பூபதியின் நினைவை ஒட்டி பின்வரும் அம்சங்களை நடைமுறைப்படுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

30ஆம்திகதிதொடக்கம்ஏப். 10 ஆம் திகதிவரை ஒவ்வொரு சனசமூக நிலையமும் தொடர்ச்சியான உண்ணா விரதத்தை உடன்செய்தல், உண்ணாவிரதத்தை முடித்து வைக்க மாவீரர்களின் பெற்றோர்களை அழைத்தல், அன்னையின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்துதல், மார்ச் 30-ஏப்ரல் 17வரை சிரமதானம் செய்தல், தினமும் கலந்துரையாடல்களை கிராமங்களில் ஒழுங்கு செய்தல், ஏப்ரல் 11 ஆம் திகதி மாநகரசபை, நகரசபை, சமாசங்கள், பிரதேச சபைகளில் அடையாள உண்ணா விரதம் மேற்கொளளல், ஏப்ரல் 15ஆம் திகதி 5 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடாத்தல் ஆகிய தீர்மானங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் கூட்டத்தில் அனைவருக்கும் வழங்கப்பட்டது. (பா)

## வரவு-செலவு திட்டம் நிறைவேறியது

இந்தியாவின் பொது வரவு செலவுத் திட்டம் லோக்சபாவில் குரல் வாக்குமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1992/1993 ஆண்டுக்கான பொது வரவுசெலவுத் திட்டம் லோக்சபாவில் மூன்று தினங்கள் விவாதிக்கப்பட்ட பின் நேற்று குரல் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

# தமிழக காவல்துறைக்கு நவீன த. தொ. கட்டமைப்பு

(சென்னை)

தமிழ்நாடு காவல்துறைக்கு அதிநவீன நுண்ணலைத் தகவல் தொடர்பு கட்டமைப்பு ஒன்றை பொதுத்துறை நிறுவனமான பாரத எலெக்ரோனிக்ஸ் நிறுவனம் அமைத்துக் கொடுக்கவிருக்கின்றது.

சுமார் நான்கு கோடி ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த திட்டத்திற்கான ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம்சென்னையில்கையெழுத்தாகியுள்ளது.

## கஷ்ட நிவாரணம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் அரசினால் அறிவிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டிற்குரிய கஷ்ட நிவாரணப் படி வழங்கப்படவில்லை என்று தெரிவிகப்படுகிறது.

இது தொடர்பாக திணைக்கள ஊழியர்கள் கொழும்பு தலைமைத் திணைக்களத்துடன் பலமுறை நேரிலும், கடிதம் மூலமும் தொடர்பு கொண்டும் இன்றுவரை எதுவித பலனுமில்லை என்று ஊழியர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

( 24 )

எதிரியின்

கிறோம் இதனால் தற்போது எதிரி எம் மண்ணை விட்டோடி ஒழிவதை நீங்கள் அறிவீர்கள் அந்தளவிற்கு எமது தாக்குதல்கள் முனைப்படைந்துள்ளன.

தொடர்ந்து சிறிலங்கா அரசு திட்டமிட்டவகையில் பொருளாதாரரீதியாகஎம்மைஅழிக்க முற்பட்டபோது மக்களும்நாமும்இணைந்துஎமது கடும்உழைப்பாலும், சுயமுயற்சியாலும் அதனை உடைத்தெறிந்தோம். எமது விடுதலையை நாம் விரைந்து வென்றெடுக்க அனைத்து இளைஞர்களும், யுவதிகளும், வயோதிபர்களும் எம்முடன்இணைந்துபோராட வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு மக்கள் எம்முடன் இணைகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு எமது விடுதலையை நாம் வென்றெடுக்கலாம் நாம் அனைவரும் இறுதி வரை இணைந்து நின்று எமது விடுதலையை வென்றெடுப்போம் என்றார். (ச)


# மரண அறிவித்தல்

## திரு. கந்தசாமி மணிராஜ்

அவர்கள்

| | |
|---|---|
| மலர்வு: | உதிர்வு: |
| 6-8-1961 | 28-3-1992 |

திரு.கந்தசாமி மணிராஜ் அவர்கள் 28.3.92 அன்று அகால மரணமானார். அன்னாரின் பூதவுடல் இன்று 29 3.92 பிற்பகல் 2.00 மணி அளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள்

54,லோட்டஸ் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி. சிவலிங்கம்
(திருநெல்வேலி வெற்றிலை வியாபாரி)

(2346)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.